IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

OS. No.13/2008 Date: 08.04.2025

DW1-சுந்தரம்

சாட்சி மீண்டும் முன்னிலையானதன் பேரில் வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

சின்னான், பெரியான் ஆகியோர் சகோதரர்கள். சின்னான் என்பவருக்கு 4 ஆண் மக்கள், 4 பெண் மக்கள். பெரியானுக்கு 5 ஆண் மக்கள், ஒரு மகள். வாதிகளும், 1, 2 பிரதிவாதிகளும் பெரியானின் வாரிசுகள். இறந்து போன 1ம் பிரதிவாதி மந்திரியின் வாரிசுகள் தான் 35 முதல் 40 பிரதிவாதிகள். 3 முதல் 34 மற்றும் 41 முதல் 79 பிரதிவாதிகள் சின்னானின் வாரிசுகள். தாவா 1வது அயிட்ட சொத்து சின்னான் மற்றும் பெரியான் ஆகியோருக்கு பொதுவில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். தாவா 2 வது அயிட்ட சொத்து பெரியானுக்கு தனிப்பட்ட சொத்து என்றால் சரிதான். என் அண்ணன் சென்னன் (எ) மாணிக்கம் தாவா சொத்துக்களை பொறுத்து அ.வ.எண்.382/1987 என்ற வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கில் 25.10.1988ல் முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். 27.06.1997ல் இறுதிநிலை தீர்ப்பாணையும் பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். அத்தீர்ப்பில் சென்னன் (எ) மாணிக்கத்திற்கு அயிட்டம் 1ல் 1/12 பாகமும், அயிட்டம் 2ல் 1/6 பாகமும் தீர்ப்பானது. அந்த சொத்தை அவர் நீதிமன்றம் மூலம் சுவாதீனமும் எடுத்துக்கொண்டார். அந்த சொத்துக்கள் முழுவதையும் நான் அவரிடமிருந்து 09.10.1998ல் வா.சா.ஆ.9ன் படி கிரையம் வாங்கினேன். பி.வா.சா.ஆ.2ன் படி நான் சின்னானிடமும் 20 செண்ட் நிலம் கிரையம் வாங்கியுள்ளேன். அந்த நிலத்தை என் பெயரில் உட்பிரிவும் செய்து கொண்டேன். அந்த 20 செண்ட் நிலம் அ.வ.எண்.382/1987 வழக்கிலும் இந்த வழக்கிலும் சேர்க்கப்படவில்லை. அ.வ.எண்.382/1987 வழக்கு நிலுவையில் இருக்கும் போது பி.வா.சா.ஆ.3ன் கீழ் நான் என் அப்பாவிடம் நிலம் கிரையம் வாங்கினேன். ஆனால் அப்போது என் அப்பாவிற்கு 23-1/2 செண்ட் நிலம் மட்டும் தான் பாத்தியம் என்றாலும், நான் வேண்டுமென்றே 30 செண்ட் என குறிப்பிட்டு

கிரையம் வாங்கி கொண்டேன் என்றால் சரியல்ல. தாவா நிலுவையில் இருக்கும் போது கிரையம் பெற்றதால் அக்கிரையம் செல்லாது என்றால் சரியல்ல. இத்தாவா நிலுவையில் இருக்கும் போது நான் தாவா சொத்தின் ஒரு பகுதியை கடந்த 11.10.2019 ல் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். அந்த கிரைய ஆவணம் வா.சா.ஆ.16. அந்த கிரையமும் தாவா நிலுவையில் இருக்கும் போது வாங்கியதால் செல்லாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.16 ல் கிரைய சொத்து பிதுர்ராஜ்ஜிய சொத்து என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 ன் படி நான் பங்கஜம் என்பவருக்கு நிலம் விற்பனை செய்தேன் என்றால் சரிதான். அந்த சொத்து நான் வா.சா.ஆ.9 ன் படி கிரையம் வாங்கியது என்றால் சரிதான். அந்த சொத்து தாவாவில் சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். அச்சொத்து ஆதிதிராவிடர் நிபந்தனை பட்டா நிலம் என்பதால் நான் தான் நிலம் ஆர்ஜிதம் இழப்பீடாக ரூ.5,67,930/- பெற்றேன் என்றால் சரிதான். ச.எண்.661/4D, 661/5 ல் மொத்தம் 75 செண்ட நிலம் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டது என்றால் சரிதான். அதில் 46 செண்ட் நிலத்தை நான் சென்னன் (எ) மாணிக்கத்திடம் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். மீதமுள்ள 29 செண்ட் நிலத்தில் வாதிகளுக்கும் பாத்தியமுண்டு என்றால் சரியல்ல. அந்த நிலத்திற்கான இழப்பீட்டு தொகையில் பாகமாக தலா ரூ.43,970/-யை நான் வாதிகளுக்கு கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. ச.எண்.660/2 ல் 340 ச.மீ நிலம் சின்னானிடமிருந்து ஆர்ஜிதம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அதற்கான நஷ்ட ஈடு தொகையான ரூ.1,12,215/- யை நான் தான் வாங்கினேன் என்றால் எனக்கு நினைவில்லை. அதிலும் வாதிகளுக்கு தலா ரூ.22,443/- பாகம் பிரித்து கொடுக்க நான் கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நில ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலம் முழுவதும் எனக்கு மட்டும் பாத்தியம் என நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் வாதிகளுக்கு கிடைக்க வேண்டிய பாகத்தை ஏமாற்றுவதற்காக தான் வழக்கை இளுக்கடித்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் 09.04.2013 ல் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் தாவா சொத்து ஏற்கனவே வாய்மொழியாக பாகம் பிரிந்து விட்டதாக எதிர்வாதம் செய்யவில்லை என்றால் சரிதான். பின்னிட்டு தான் 22.08.2017 ல் வாய்மொழி

பாகம் பிரிந்துவிட்டதாக பொய்யாக கூடுதல் எதிர் வழக்குரை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. வாய்மொழி கறார் எப்போது யார் முன்னிலையில் நடைபெற்றது என்றும் யாருக்கு எவ்வளவு பாகம் ஒதுக்கப்பட்டது என்று நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வாய்மொழி பாகக்கறார் பிரிந்துவிட்டதாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வாதிகள் சுவாதீனத்தில் இல்லை என சொல்வது பொய் என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/-சுந்தரம்

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.